# மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2022-2023-ம் நிதி ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கை

**(DMFT - Annual Budget)**

மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை திட்டங்களின் வரவு செலவு அறிக்கையின் விபரம் பின்வருமாறு.

மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க. எண். 764/2017-கனிமம், நாள்.12.09.2017-ன்படி மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையானது உருவாக்கப்பட்டது. அதன்பின்னர் அரசாணை எண்.35, தொழில் (எம்எம்டி.1) துறை, நாள்.11.03.2022-க்கிணங்க, மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.578/கனிமம்/2022, நாள். 03.11.2022-ன்படியும் மறு சீரமைப்பு செய்யப்பட்டது.

03.12.2022-வரை **ரூ.5,28,86,161/- (ரூபாய் ஐந்து கோடியே இருபத்து எட்டு இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து நூற்று அறுபத்து ஒன்று மட்டும்)** வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியில் ஏப்ரல் 2022 முதல் நவம்பர் 2022 வரை **ரூ.78,58,837/- (ரூபாய் எழுபத்து எட்டு இலட்சத்து ஐம்பத்து எட்டாயிரத்து எண்ணூற்று முப்பத்து ஏழு மட்டும்)** கனிமக் கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் டிசம்பர் 1 முதல் 3 வரை ரூ.87,527/- (ரூபாய் எண்பத்து ஏழாயிரத்து ஐநூற்று இருபத்து ஏழு மட்டும்) வசூலிக்கப்பட்டுள்ளது.

2022-2023-ம் நிதியாண்டில் முதன்மை கல்வி அலுவலர், மதுரை அவர்களிடமிருந்து நரசிங்கம் பஞ்சாயத்தில் உள்ள பெண்கள் மாதிரி பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு ரூ.75,00,000/- (ரூபாய் எழுபத்து ஐந்து இலட்சம் மட்டும்) கோரப்பட்டுள்ளது. இந்நிலையில் மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகள் 2017-ன் விதி எண்.16(4)-ன்படி ஒரு நிதியாண்டில் ரூ.50,00,000/- வரையிலான திட்டப் பணிகளுக்கு மட்டுமே மாவட்ட ஆட்சியர் அவர்களால் ஏற்பளிப்பு செய்ய இயலும் என்பதால் தலைவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.578/கனிமம்/2022, நாள்.01.12.2022-ன்படி **ரூ.75,00,000/- (ரூபாய் எழுபத்து ஐந்து இலட்சம் மட்டும்)** நிர்வாக ஒப்புதலும், அதிலிருந்து **ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்)** நிதி ஒப்புதலும் திட்ட இயக்குநர் / கூடுதல் ஆட்சியர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2022-23 வரவு செலவு கணக்கீடு (94 % தொகையிலிருந்து):

| வ.எண் | விளக்கம் | தொகை |
|---|---|---|
| (1) | 31.03.2022 அன்று 94% கணக்கில் இருப்பில் இருந்த தொகை. | 3,71,16,687 |
| (2) | ஏப்ரல் 2022 முதல் நவம்பர் 2022 வரை (8 மாதங்கள்) வசூல் செய்யப்பட்ட தொகை. | 78,58,837 |
| (3) | வருடாந்திர வசூல் தோராயமாக. (2) / 8 *12 = (3) | 1,17,88,255 |
| (4) | நிர்வாக செலவுகளுக்காக ஒதுக்க வேண்டிய தொகை தோராயமாக. | 7,07,295 |
| (5) | புதிய திட்டத்திற்காக செலவு செய்யப்பட்ட தொகை. | 50,00,000 |
| (6) | 31.03.2023 அன்று தோராயாமாக இருப்பில் இருக்க வேண்டிய தொகை | 4,31,97,647 |

நிர்வாக செலவினக் கணக்கீடு (6% தொகையிலிருந்து):

| வ.எண் | விளக்கம் | தொகை |
|---|---|---|
| (1) | 31.03.2022 அன்று இருப்பிலுள்ள தொகை | 12,90,645 |
| (2) | ஏப்ரல் 2022 முதல் நவம்பர் 2022 வரை (8 மாதங்கள்) 6% தொகை. | 4,71,530 |
| (3) | வருடாந்திர தொகை தோராயமாக. (2) / 8 *12 = (3) | 7,07,295 |
| | செலவினம் | |
| (4) | நவம்பர் 2022 வரை தற்காலிக பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம். | 2,09,300 |
| (5) | டிசம்பர் 2022 முதல் மார்ச் 2023 வரை தோராயமாக வழங்க வேண்டிய ஊதியம். நாள் ஒன்றுக்கு ரூ.717/ வீதம் | 1,52,685 |
| (6) | தணிக்கையாளருக்கு வழங்க வேண்டிய நிலுவை தொகை | 23,600 |
| (7) | தணிக்கையாளருக்கு வருடாந்திர 2020-21, 2021-22 ஆம் ஆண்டு தணிக்கை செய்ய வழங்க வேண்டிய தொகை தோராயமாக. | 50,000 |
| | தோராயமான மொத்த செலவுகள் | 4,35,585 |

2022-2023 நிதியாண்டில் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டுள்ள தொகை விபரம் பின்வருமாறு

**2022-2023**

| மாதம் | சீனியரேஜ் தொகை மூலம் பெறப்பட்ட அறக்கட்டளை நிதி (ரூபாயாக) | நீதிமன்றம் மூலம் அபராத தொகையாக பெறப்பட்ட அறக்கட்டளை நிதி (ரூபாயாக) | மொத்தம் (ரூபாயாக) |
|---|---|---|---|
| ஏப்ரல்-2022 | 9,97,461 | 1,67,000 | 11,64,461 |
| மே-2022 | 10,91,880 | 2,42,500 | 13,34,380 |
| ஜீன்-2022 | 9,28,459 | 1,67,500 | 10,95,959 |
| ஜீலை-2022 | 8,81,523 | 35,000 | 9,16,523 |
| ஆகஸ்ட்-2022 | 10,86,251 | 0 | 10,86,251 |
| செப்டம்பர்-2022 | 7,45,359 | 15,000 | 7,60,359 |
| அக்டோபர்-2022 | 6,84,200 | 0 | 6,84,200 |
| நவம்பர்-2022 | 8,16,704 | 0 | 8,16,704 |
| **மொத்தம்** | **72,31,837** | **6,27,000** | **78,58,837** |

இவ்வறிக்கையானது மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் மேலாண்மை மற்றும் நிர்வாக குழு முன்பு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டது.

13/12

தலைவர், மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு
அறக்கட்டளை / மாவட்ட ஆட்சித்தலைவர்,
மதுரை.

13/12/22 13/12/22

13/12/2022